உ

சிவமயம்



சிறுவிளான் இளவாலையைப்

பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் ஐயாத்துரை தங்கம்மா

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

# தங்கமலர்

05.02.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிமயம்



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் ஐயாத்துரை-தங்கம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# தங்கமலர்

05-02-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தீபமாய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்.
பாசத்தோடும் எம்மைப் பேணிப்பாதுகாத்து
நல்லறிவூட்டி, நல்வழிப்படுத்தி
எமது வாழ்வின் இன்பத்திலும்
துன்பத்திலும் பகிர்ந்து கொண்டு – இன்று
எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து
இறைவனின் திருப்பாத கமலத்தில்
சரணாகதி பெற்ற அன்புத் தெய்வத்திற்கு
இம் மலரினைக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "



தோற்றம்
25.02.1925

மறைவு
21.01.2015

அமரர்

# ஐயாத்துரை தங்கம்மா

அவர்கள்

## திதி நிர்ணயம்

ஜய வருடம் தைத்திங்கள் ஏழு
தூய திதி பிரதமை சொல் பூர்வம்-ஏயபுகழ்
தேங்கும் திருவோணமாம் தங்கம்மா-தவளக்கிரி
அம்பாளடி சேர்ந்த பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்
## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுல முஞ்சுற்றமும் ஒரூரும் நீ
முய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சந் துய்ப்பிப்பாய் நீ
இப் பொன் நீ இம்மணிநீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறுஊர்ந்த செவல்வம் நீயே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மைஆய யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுதந்தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்மகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாத வேண்டம் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாதாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெட நீலக்கடலாலே
மெள்ள வரும் சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறவோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மண வாளப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமுங்கரும்பும் அங்கை
சேர்த்தாளை முகக்கண்ணியைதொழுவார்க்கொரு தீங்கில்லையே

## வாழ்த்து

தனம் தரும்
கல்வி தரும்
ஒரு நாளும்
தளர்வறிய
மனம் தரும்
நல்லனவெல்லாம் தரும்
தெய்வ வடிவம் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும்
அன்பர் என்பவர்கே
தனம் தரும் பூங்குழளால்
அபிராமி கடைக் கண்களே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தங்கம்மா-ஐயாத்துரை அவர்களின வாழ்வுச் சீர்

ஈழமணித்திரு நாட்டின் வடதிசையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் எனும் இடத்தில் தவளக்கிரி முத்துமாரி அம்மன் அருட்பாலிக்கும், கலைஞர் வாழ் புண்ணிய பூமியாம் அளவெட்டி எனும் அழகியகிராமம். அளவையம்பதியிலே தவளக்கிரி முத்துமாரி அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கும் வீரசைவ மரபிலே தோன்றியவர்களே தம்பயப்புலம் வாழ் சரவணமுத்த பொன்னம்மா தம்பதியினர் ஆவர். அவர்களது இல்லற வாழ்வின் இனிய முத்துக்களாய் தோன்றியவர்களே அன்னம்மா, அமிர்தலிங்கம்,(ஆசிரியர்) நாகேஸ்வரியம்மா, நல்லம்மா, சிவசம்பு(ஆசிரியர்) தங்கம்மா, வீரசிங்கம்(பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோராவர்.

நன்மக்கள் எழுவரில் தங்கம்மா எனும் நங்கை நல்லாள் 1925ம் ஆண்ட மாசி மாதம் 25ந் திகதி பிறந்தார். கல்வி. கலை போன்றவற்றில் சிறுவயத முதல் மணப்பருவம் எய்தியதும் அளவெட்டி வாழ் சுப்பிரமணியம் தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரன் ஐயாத்துரை (கல்வி சாரா ஊழியர் பலாலி ஆசிரியர் பயிற்றிக் கலாசாலை) என்பவருக்குத் திருமணஞ் செய்து வைத்தனர். இருவரும் ஈருடலும் ஒருயிரும் போல் இல்லறம் நடாத்தி வந்தனர். அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகளிலும் திருநந்தவனம் அமைத்தலிலும் தன் கணவருடன் சரிசமமாக நின்று அயராது உழைத்தவர் ஆவார். அர்ச்சகராக இருந்த கணவருக்கு ஊறுதுணையாக இருந்தார். பிள்ளைகளில் அன்பும் பாசமும் மிகுந்த அக்கறையும் உடைய இவர்கள் தமது மூத்த மகளான நாகலட்சுமி என்பவருக்கு திருகோணமலையைச் சேர்ந்த சிவானந்தம் (லிகிதர் துறைமுக அதிகார சபை திருகோணமலை) என்பவரைத் திருமணஞ் செய்து வைத்தனர். அவர்களின் இல்லற வாழ்வின் பேறாக வாகீசன் எனும் புத்திரனைப் பெற்றனர். தனது பேரன் முகம் கண்டதும் அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

2வது பிள்ளையான நாகராசா (சாலைப் பரிசோதகர்,இ.போ.ச கோண்டாவில்) என்பவருக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த புவனேஸ்வரியைத் திருமணஞ் செய்து வைத்தனர். அவர்களின் இனிய இல்லறவாழ்வின் பயனாக அஜந்தன்,சுரேகா,திவாஜினி ஆகியோரைப் பெற்றனர். சுரேகா என்பவரக்கு தேவசுதன் என்பவரைத் திருமணஞ் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்ததன் பேறாக தனுமிதன் எனும் புத்திரனைப் பெற்றனர். நிவாஜினி என்பவருக்கு கஜேந்திரன் என்பவரைத் திருமணஞ் செய்து வைத்தனர். இருவரது இல்லறவாழ்வின் பயனாக பூர்விதா எனும் புத்திரியைப் பெற்றனர். தனது பேரப்பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் கண்ட களிப்படைந்தார்.

மூன்றாவது பிள்ளையான ஜெயலட்சுமி என்பவருக்கு பத்துப்பனையடி அளவெட்டியைச் சேர்ந்த கோதண்டபாணி (கிளைமுகாமையாளர் அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்) என்பவரைத் திருமணஞ் செய்து வைத்தனர். இவர்களின் இல்லற வாழ்வின் நற்பயனாக நிராகுலன் நிரூபனா, கஜந்தன், தினேஷன், ஜனேஷன் என்பவர்களைப் பிள்ளைகளாகப் பெற்றனர். நிரூபனா-சுதாஸ் என்பவரைத் திருமணஞ்செய்து கொண்டதன் பேறாக ரக்ஷனா எனும் புத்திரியைப் பெற்றனர் பேரப்பிள்ளைகளது அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்த இவர் பூட்டப்பிள்ளையையும் மடியில் வைத்து மகிழ்ந்தார்.

நான்காவது பிள்ளையான ஜெயராசா என்பவர் ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது நோய் காரணமாக 1993ம் ஆண்டு அமரரானார். இந்தச்செய்தி தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் தாங்கொணாத்துயரில் ஆழ்த்தியது. மகனின் பிரிவால் மனமுடைந்த இவர் அடிக்கடி மகன் பெயர் சொல்லி அழுவது பார்ப்போருக்கு மிகுந்த வேதனையளித்தது.

ஐந்தாவது பிள்ளையான சௌந்தரராசா (முன்னாள் உத்தியோகத்தர் லங்கா சீமேந்து லிமிட்டெட்) மயிலிட்டியைச் சேர்ந்த சியாமினிதேவி என்பவரைத் திருமணஞ் செய்ததன் பேறாக சாரங்கா, பிரியங்கா,எனும் இரு புத்திரிகளைப் பெற்றனர். ஜேர்மனியில் வசிக்கும் இவர்கள் தமது தாயை, மாமியை, அப்பம்மாவைப் பார்க்கவென அடிக்கடி வருவார்கள். நடக்கமுடியாத நேரத்தில் சக்கர நாற்காலியை தம் நாட்டிலிருந்து மாமியாருக்கு மருமகள் கொண்டு வந்தார். அருகிலிருந்து அவர் பணிவிடை செய்தனர். தமது மகன், மருமகள், பேரப்பிள்ளைகளின் அன்பான கவனிப்பில் அகமகிழ்ந்திருந்தார்.

ஆறாவது பிள்ளையான புஸ்பராசா(கல்வி சாரா ஊழியார்,யூனியன் கல்லூரி,தெல்லிப்பளை) முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்றுநர்) மயிலிட்டியைச்சேர்ந்த நவநிதி என்பவரைத் திருமணம் செய்ததன் பேறாக டினோஜன், சரண்ஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மகன் மேலும் மகன் தாய் மேலும் வைத்த அன்பு சொல்லில் அடங்க முடியாதவையாகும்.

இவ்வாறாக பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என சந்தோஷமாக வாழ்ந்து வந்ததார். கணவன் நோயுற்றிருந்த வேளை அன்போடும் பரிவோடும் அவரைப் பராமரித்தார். பதி பக்தியிற் சிறந்து விளங்கிய அவர் நல்லமகளாக, மனைவியாக, தாயாக, மாமியாக, பெரியம்மாவாக, சின்னம்மாவாக, பேர்த்தியாக, பூட்டியாக. நண்பியாக எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்து வந்தார்.

மகனின் இழப்பும், கணவனின் பிரிவும்(1996) அவரை கதிகலங்க வைத்தது. ஐயாவந்திருக்கிறார் எனக்கூறி எல்லோரையும் கலங்க வைத்திடுவார். கவலையின் மத்தியிலும் தம் பிள்ளைகளை பேரப்பிள்ளைகளை அன்பாக ஆதரித்து வந்தார். காலம் செல்லச் செல்ல நோயும் மெல்ல மெல்ல அவரை அணுகியது. மக்கள், பேரப்பிள்ளைகளின் அன்பான பராமரிப்பினால் ஆறுதல் அடைந்தார். கண்ணை இமை காப்பது போலக் காத்திருந்தாலும் காலன் காத்திருப்பானா? தொண்ணூறு வயதினிலே பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், கலங்கி நிற்க ஜய வருடம் தைத்திங்கள் 7ம் நாள் (21.01.2015) புதன்கிழமை பூர்வபட்ஷ பிரதமைத்திதி திருவோண நன்னாளில் அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்பாள் அடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வாங்கு வாழ்ந்த தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பல்கள்

### பார்க்க என்னால் முடியவில்லை.

தூரதேசம் இருந்தாலும்
உங்கள் நினைவே எங்களுக்கு
தாத்தாவும் பாட்டியும் உங்கள்
கதை பேசி மகிழ்வோமே
உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு
தாத்தா (வீரசிங்கம்) ஒரு நிமிடம் மௌனமாகி
பின் அழுது விட்டார்
சகோதரர்கள் யாருமின்றி
தனிமரமாய் அழுகின்றாரே
தேற்ற என்னைல் முடியவில்லை
தேம்பி அழும் தாத்தாவை
தன் அருமை மைச்சாளை
என்று காண்போம் என்றெண்ணி
பாட்டி துடி துடிக்கின்றார்
பார்க்க என்னால் முடியவில்லை.

ஜனேஷன்
(அவுஸ்ரேலியா)

### காலன் தான் என் செய்வான்?

எம் அருமை அம்மம்மா
ஏங்கி அழுகின்றோமே
உங்கள் பிரிவு எமையெல்லாம்
வாட்டி வதைக்கின்றதேனோ?
காசில்லை எனக் கேட்டால்
காசு எமக்குத் தந்துதவி
பாசமுடன் ஆதரித்த
அன்பு அம்மம்மாவே
உங்கள் முகம் காண்போமா?
உளம் உருகி அழுகின்றோம்
காலத்தின் கட்டாயம் இது வென்றால்
காலன் தான் என் செய்வான்....?

**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறந்திடல் இயலுமா?

அன்பினில் சிறந்தும் பண்பினிற் சிறந்தும்
யார்க்கும் உதவும் குணத்தினிற் சிறந்தும்
எல்லோர் மதிப்பையும் அன்பையும் பெற்ற
எங்கள் மாமியார்த் தெய்வமே....!

உங்கள் பிரிவுத் துயரினை நாங்கள்
உலகம் மீதில் எவ்விதம் பொறுப்போம்...?
பிள்ளைகள் போல எம்மையும் பார்த்தீரே....
உதவிகள் பலவும் ஆற்றியே காத்தீர்
இங்கு நாம் பிரிவுத் துயரினைத் தாங்கும்
வழியறியாமல் வாடுகின்றோமே
பரந்த மனமும் சிறந்த நோக்கமும் கொண்ட
உங்கள் அன்பு நெஞ்சமும் மலர்ந்த முகமும்
மறந்திடல் இயலுமா...?

மருமகன்
கோதண்டபாணி.

## ஏங்கி அழுகின்றோமே

நாடு விட்டு வெளிநாடு வந்து
நட்டாற்றில் தவிக்கின்றோம்
என்னருமை மாமியே
எங்கு சென்றீர் எமை விட்டு

நடக்க முடியாத உங்களுக்கு
சக்கர வண்டி தள்ளி வந்து
ஊர் சுற்றிப் பார்க்க
உவந்தளித்தே மகிழ்வுற்றோம்

அன்புடனே உணவூட்டி
ஆசையுடன் கதைபேசி
எங்கள் மாமி அருகிருந்து
இன்புற்றோம் சிலநாட்கள்

அந்த நாள் இனிவருமா
அழுது மனம் தவிக்கிறது
எங்கு நாம் இனிக்காண்போம்
ஏங்கி அழுகின்றோமே...!

*மருமகள்*
*சியாமினி தேவி (ஜேர்மனி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவுலகம் தத்துவமா...?

அப்பம்மா அப்பம்மா என
ஆசை மொழி பேசி
சுற்றித் சுற்றி வந்தோமே
சுந்தர முகம் அதனை

அன்பாக எமை அணைத்து
ஆசை முத்தமிட்டு
பாச மழை பொழிந்து
பரிதவிக்க விட்டீரே

அப்பம்மா எனும் உறவு
அகிலம் விட்டுப் போனதேனோ
அறியாமல் தவிக்கின்றோமே
அகமுருகி நாமிங்கே

கண்ணீரில் நனைகின்றோம்
காணாது தவிக்கின்றோம்
நிலையாமை என்பது தான்
பூவுலகத் தத்துவமா..?

*பேரப்பிள்ளைகள்*
*சாரங்கா,பிரியங்கா(ஜேர்மனி)*

## வாடி மனம் சோர்கின்றதேனோ?

அன்பாக எமை அணைத்து
ஆதரவு தந்த எங்கள்
அப்பம்மா எங்கே என
அனுதினமும் ஏங்குகிறோம்.

உதவிகள் பற்பல செய்தே
எங்கள் உளம் குளிரச்
செய்த அப்பம்மா எங்கே
தேடித் தேடி அலைகின்றோமே
வாடி மனம் சோர்கின்றதேனோ..?

*பேரப்பிள்ளைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிதவிக்கின்றோமே

பாசத்துடன் எமை வளர்த்த
பாச தீபமே எமை
பரிதவிக்க விட்டு நீரும்
எங்கே சென்றிர்?
பாரில் நாம் உங்கள் முகம்
காண்போமா இனி?
பரிதவிக்கின்றோமே
பிள்ளைகள் நாமிங்கு

பிள்ளைகள்.

## மனமுருகி அழுகின்றோம்

வாசலில் நின்று வரவேற்கும்
மாமியை நாம்
காணாது இன்று மனம்
கலங்கி நிற்கின்றோம்.

புன்னகை வதனம்
போனதெங்கே தேடுகின்றோம்
காணவில்லை எங்கும் என
மனமுருகி அழுகின்றோம்.

மருமக்கள்.

## அத்தையைக் காண்போமா?

அத்தை அத்தை என
அடிக்கடி வந்தோமே
இனி அத்தை எனச் சொல்ல
யாருமின்றி அழுகின்றோம்.
பற்பல கதை பேசி
பாசமுடன் எமை அணைத்த
அத்தையைக் காண்போமா
அகிலத்தில் மீண்டும் நாம்

மருமக்கள்.

## எங்கே எம் பெரியம்மா?

நிமிர்ந்த நடையும்
நேரிய பார்வையும்
நெஞ்சுக்குள் வந்தெம்மை
வாட்டி வதைக்கிறதே
செல்விருந்தோம்பி வருவிருந்து
காத்திருந்த எம்பெரியம்மா
எங்கு சென்றீர் எமைவிட்டு
ஏங்கி அழுகின்றோமே.

பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படி மறப்போம் நாம்...?

சின்னம்மா சின்னம்மா என
அழைத்து நாம் வீடுவர
சிரித்த முகத்துடனே எமை
வரவேற்று மகிழ்வீரே

உபசரித்து உளம் மகிழ்ந்து
வழியனுப்பும் பண்பதனை
எப்படி மறப்போம் நாம்
இப்புவி மீதினிலே.

பேரமக்கள்
உற்றார், உறவினர், அயலவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம்
அம்பாள் துணை

அளவெட்டி-வடக்கு

# தவளக்கிரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## அமரர் திருமதி தங்கம்மா ஐயாத்துரை அம்மையார் அவர்களுக்கு பிரார்த்தனை உரை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பரம்பரை பூசகர் சுப்பிரமணியம் ஐயாத்துரை ஐயா அவர்கள் அவரின் அன்பு மனைவி திருமதி ஐயாத்துரை ஐயா தங்கம்மா அவர்கள் எல்லோரிடமும் புன்னகை பூத்த முகத்துடனும் அன்பாகவும் பழகும் இயல்பினர் அம்மையார் தனது கணவர் ஆலயத்தில் பூசைத்தொண்டு செய்த காலப்பகுதியில் ஆலய வளர்சிக்கு ஐயாவுடன் இணைந்து செயற்பட்ட ஒருவர் ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களிற்கு தேவையான உதவிகளைச் செய்வதோடு சிறந்த விருந்தோம்பும் ஒரு பண்பாளர் இத்தகைய ஒருவரின் மறைவு அவருடன் தொடர்புடைய அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை. என்ன செய்வது மக்களாய்ப்பிறந்தோரின் மகத்தான முடிவு இதுவாகும். அம்மையாரின் ஆத்மாஇனிப் பிறவாத வரம் பெற்று சிவ ஐக்கியமாகி சாந்தி பெற தவளக்கிரி அன்னை முத்துமாரியின் தாழ்மைகளைப் பணிவோமாக.

ஓம் சாந்தி.

**வை.ஆலய.**
**பரிபாலன சபையினர்.**

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | ........................ |
| **தலைவர்.** | **செயலாளர்.** | **பொருளாளர்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரஸ்வதி அந்தாதி

## காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்– துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

## குமரகுருபர சுவாமிகள் அருளிய சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செவ்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசியின் மகிமை

துளசி என்ற சொல்லுக்கு பரிசுத்தமானது என்று அர்த்தம். இன்பமான இல்லறம் அமையவும்ச மாங்கல்யம் நிலைக்கவும் துளசியை வணங்குவது அவசியம் என்று சொல்லுவது சாஸ்திரம்.

துளசி வழிபாட்டை பெரும்பாலும் பெண்களே செய்யிறது வழக்கம். துளசியை சிறு தொட்டியிலோ அதற்கான மாடத்திலோ வைச்சு தினமும் விளக்கேற்றி சுற்றிவந்து வணங்கலாம். துளசிக்கு நீரும் பூவும் போட்டு வணங்குவது அழியாத செல்வமும் நிலையான மங்களமும் தருவது ஐதிகம்.

துளசிக்கு பிருந்தான்னு இன்னொரு பெயரும் உண்டு என்பதால் இதை பிருந்தாவன விரத பூஜை என்றும் சொல்வாங்க. தினமும் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிவிட்டு மாடத்துல தீபம் ஏற்றிவைச்சு வலம் வந்து மனதார வேண்டினாலே போதும். அன்றாட வாழ்வுல ஆனந்தம் நிறையும். ஆரோக்கியம் கிடைக்கும். முக்கியமான விஷயம் பெண்கள் துளசியை வணங்கலாமே தவிர பறிக்கக் கூடாது. ஆண்கள் தான் பறிக்கலாம். அதுவும் பகல் 12 மணிக்கு முன் பறிச்சுடணும். செவ்வாய்,வெள்ளி, மாத வருடப்பிறப்பு நாட்கள்,அமாவாசை, துவாதசி நாட்களில் பறிப்பது கூடாது. துளசியை பறிக்கிறதுக்கு முன்னாலே தாயே பகவானை பூஜிக்கறதுக்காக உன்னைப் பறிக்கிறேன் அனுமதி கொடுன்னு கேட்டு வணங்கிட்டுப் பறிக்கறது அவசியம்.

ஒவ்வொரு வருஷமும் கார்த்திகை மாதம் சுக்ல பட்ச துவாதசி திதி அன்னிக்கு விரதமிருந்து துளசி பூஜை செய்யிறது சகல சௌபாக்கியமும் கிடைக்கச் செய்யும். தம்பதியர் ஒற்றுமை அதிகரிக்கும். இந்த விரதம் இறக்கறவங்க காலையில் இருந்து மறுநாள் காலை வரைக்கும் துளசி தீர்த்தம் தவிர வேறு எதுவும் சாப்பிடாம உபவாசம் இருக்கறது நல்லது. இயலாதவங்க சிறிது பால் அல்லது பழம் சாப்பிட்டுக்கலாம்.

துளசி மாடத்தை சுத்தம் செஞ்சு பூப்போட்டு, மஞ்சள், குங்கும பொட்டு வைக்கணும். மஞ்சள், தாலிச் சரடு, தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு உள்ளிட்ட மங்களப் பொருட்களை வைச்சு துளசி தாயே ஏற்று அருள்புரின்னு வேண்டிக்கிட்டு தூபதீபம் காட்டி, சர்க்கரைப்பொங்கல், அல்லது பால்பாயசம் நிவேதனம் செஞ்சு துளசி மாடத்தை ஒன்பது முறை வலம் வந்து நமஸ்காரம் செய்யணும் மனம்போல மாங்கல்யம் அமையவும், நிலைக்கவும், தம்பதியர் இடையில் ஒற்றுமை ஏற்படவும் இந்த விரதம் பலன் தருவது ஐதிகம்.

துளசியை சுற்றிவந்து வணங்குங்க. உங்களைச் சுற்றி எந்தத் தீவினையும் வராமல் தடுப்பாள் துளசிமாதா.

திருவே துளசி அம்மா தேவி
கல்யாணி அம்மா
வெள்ளிக்கிழமையிலே
விளங்குகின்ற மாதாவே
செவ்வாய்க் கிழமையிலே செழிக்க
வந்த செந்திருவே
தாயே உன் தாளிணையில்
தண்டனிட்டு நான் பணிந்தேன்
மாதாவே எமக்கு மங்கலங்கள்
தாருமம்மா
தாயாரே எங்கள் குலம் தழைக்கச்
செய்யும் அம்மாவே
ஸ்ரீதேவி தாயாரே சீரருள் செய்யும்
அம்மாவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவர் தனது மகனான அமரர் ஐ.ஜெயராசா அவர்களின் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தி பரிசில் பெற்றவர்களுக்கு வெற்றிக் கேடயங்களை வழங்கினார் (1997ல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
25
02
1925

இறப்பு
21
01
2015

சிறுவிளான் இளவாலையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் ஐயாத்துரை தங்கம்மா

அமைதியான புன்சிரிப்பும் ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவு மொழி பேசும் கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகம் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத்திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

**பிரிவால் துயருறும்**

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
ஆலய நிர்வாக சபையினரும்,
தொண்டர் சபையினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 | | 21 |
| 02 | | 01 |
| 1925 | | 2015 |



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் ஐயாத்துரை – தங்கம்மா

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இது தான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
மனித உருவங்கள் மறையலாம்
மானிட நெஞ்சில் பதித்தவை அழியாது
நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி
நேசமுடன் பழகியதை எம்மால் மறக்கமுடியுமா?
இன்று முதல் எம்மை எல்லாம்
பரிதவிக்கவிட்டு பரமனின் பாதங்களை
பற்றிய உன் போல் அன்புள்ளங்கொண்ட
இனியவரை எங்கு நாம் தேடுவோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்,உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

22.01.2015

பிரிவால் துயருறும்
ஞானோதயசனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு

25

02

1925



உதிர்வு

21

01

2015

பாசத்தின் உறைவிடமே குடும்ப ஒளிவிளக்கே
விண்ணக வாழ்விற்கு விரைந்திட்ட வித்தே
மண்ணில் எமையெல்லாம் மறந்தது ஏனோ
எண்ணி நாம் கதறுகின்றோம்
கண்ணீர் பெருக இனி எப்போது காண்போம்
இனிய உம் வதனமதை இறைவன் பாதமதில் இளைப்பாறச்
சென்றுவிட்டீர் என்றே எம்மைத் தேற்றுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் ஐயாத்துரை – தங்கம்மா**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருற்றிருக்கும்.**

*சிறுவிளான் கிராயட்டி,*
*ஞானவைரவர் ஆலய*
*பரிபாலனசபை.*

நம்பியாஸ் பிரிண்டேர்ஸ் பெரியவிளான் 0210003866

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விநாயகரைக் கீழ்க்கண்ட இலைகளால் பூஜித்தல கிடைக்கும் பலன்கள்.**

| | | |
|---|---|---|
| மருத இலை | - | மகப்பேறு |
| மரவு இலை | - | மகப்பேறு |
| அரச இலை | - | எதிரி வீழ்தல் |
| அகத்தி இலை | - | துயரம் களைதல் |
| வில்வ இலை | - | துன்பம் பெருகுதல் |
| வெள்ளெருக்கு | - | சௌபாக்கியம் |
| மாதுளை இலை | - | நற்புகழ் |
| கண்டங்கத்தரி இலை | - | லக்குமி கடாட்சம் |

**திருக்கோயிலை வலம் வருதல்**

| | | |
|---|---|---|
| பிள்ளையார் | - | ஒருமுறை |
| சூரியன் | - | இருமுறை |
| சிவன் | - | 3,5,7,9,15,21 முறை |
| விஷ்ணு,சக்தி | - | நான்கு முறை |
| முருகன் | - | நான்கு முறை |
| ஏனைய கடவுளர் | - | மூன்று முறை |

**வீதி வலம் வருவதால் பெறும் பயன்கள்**

| | | |
|---|---|---|
| காலை | - | நோய் நீங்கும் |
| உச்சிப்பொழுது | - | விரும்பிய சித்தி கிடைக்கும் |
| சாயங்காலம் | - | சகல பாவங்களும் நீங்கும் |
| அர்த்தசாமம் | - | மோட்ச சித்திப் பேறு கிடைக்கும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசதீபமாய் ஒளிர்ந்து, எம் நல்வாழ்வுக்காய் தன்னையே அர்ப்பணித்த எம் அன்புத் தாயின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்கள் கூறியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பதாதைகள், பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், சகலவழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் இன்று நடைபெறும் மோட்சதீபக்கிரியைகளில் கலந்து வழிபாடாற்றியோருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

சிறுவிளான்,
இளவாலை.
05-02-2015

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

## சுப்பிரமணியம் + தங்கம்மா

- ஐயாத்துரை
- பொன்னம்மா
- பொன்னுத்துரை
- அப்புத்துரை

- அன்னம்மா
- அ

ஐயாத்துரை →

- நாகலட்சுமி + சிவானந்தம்
  - * வாகீசன்
- நாகராசா + புவனேஸ்வரி
  - * அஜந்தன்
  - * சுரேகா + தேவசுதன்
    - தஷ்மிதன்
  - நிவாஜினி + கஜேந்திரன்
    - பூர்விதா
- ஜெயலட்சுமி + கோதண்டபாணி
  - * நிராகுலன்
  - * நிரூபனா + சுதாஸ்
    - ரக்ஷனா
  - * கஜந்தன்
  - * தினேஷன்
  - * ஜனேஷன்

  (அவுஸ்ரேலியா)
- ஜெயராசா +(அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சா விருத்தி

சரவணமுத்து + பொன்னம்மா

அன்னம்மா

அமிர்தலிங்கம்

நாகேஸ்வரி
அம்மா

நல்லம்மா

சிவசம்பு

தங்கம்மா

வீரசிங்கம்
(அவுஸ்ரேலியா)

ஜெயராசா
+(அமரர்)

சௌந்தரராசா
+(ஜேர்மனி)
சியாமினிதேவி

* சாரங்கா
* பிரியங்கா

புஸ்பராசா
+
நவநிதி

* டினோஜன்
* சரண்ஜன்

ஸ்ரேலியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

அச்சுப்பதிப்பு: ரம்யா, பெரியவிளான்.0213003661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org